ந.க.எண்.358/2021/அ1

வட்டாட்சியர் அலுவலகம்,
பெரியகுளம்.
நாள்: .12.2021

# அறிவிப்பு

தேனி மாவட்ட வருவாய் அலகில் பெரியகுளம் வட்டத்தில் காலியாக உள்ள நான்கு (04) கிராம உதவியாளர் காலிப்பணியிடங்கள் ரூ.11,100 - 35,100 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் , எழுத்துத் தேர்வு மூலம் இனச்சுழற்சி அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன.

அதற்கு பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் 1) பெரியகுளம் வட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருக்க வேண்டும். 2) குறைந்த பட்ச கல்வித் தகுதியாக 5-ம் வகுப்பு தேர்ச்சி உடையவராகயிருக்க வேண்டும். 3) வயது வரம்பு ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியினர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் அனைத்து வகுப்பைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு 21 வயது முதல் 37 வயதுக்குள் இருக்க வேண்டும். 4) வயது வரம்பு மற்ற ஏனையோருக்கு 21 வயது முதல் 34 வயதுக்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்ப படிவம், தேர்வு முறை இதர விபரங்கள் தேனி மாவட்ட இணையதளமான www.tn.nic.theni -ல் இருந்தும், பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம். தகுதியுள்ள நபர்கள் உரிய படிவத்திலான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தேவையான சான்று நகல்களுடன் வரும் 15.01.2022 மாலை 05.45 மணிக்குள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து சேரும் வகையில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும். அதற்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வட்டாட்சியர்,
பெரியகுளம்.